# பொள்ளாச்சி வரைவாளர் மாளிகை வரலாறு




பொள்ளாச்சியில் 1996–ம் ஆண்டு வரை பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் மற்றும் சிறப்பு திட்ட வட்டம் என இரண்டு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டது. அதன் கீழ் சுமார் 10 கோட்ட அலுவலகம் செயல்பட்டது. அப்பொழுது வரைவாளர்கள் ஒன்று கூடி கூட்டம் நடத்துவதற்கான சரியான கட்டடம் இல்லை. வரைவாளர்களுக்கு என்று ஓர் கட்டடம் தேவை என ஒவ்வொரு கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டது. 1990 காலகட்டங்களில் சென்னை மத்திய வரைவாளர் சங்கத்திடமும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன்பின் கண்காணிப்புப் பொறியாளர் பொள்ளாச்சி வட்டம் அவர்களை அனுகி வரைவாளர் சங்கத்திற்கு என்று பரம்பிக்குளம் ஆழியார் திட்ட வளாகத்தில் ஓர் இடம் பெறப்பட்டது.

இடம் கிடைக்கப்பெற்ற பின் அதில் ஓர் கட்டிடம் கட்டுவதற்கான கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட வட்டங்களில் உள்ள அனைத்து வரைவாளர் நண்பர்கள். 1) தலைமை வரைதொழில் அலுவலர் 2) சிறப்பு நிலை வரைதொழில் அலுவலர் 3) முதுநிலை வரைதொழில் அலுவலர் 4) வரைதொழில் அலுவலர் 5) இளநிலை வரைதொழில் அலுவலர் 6) உதவி வரைவாளர் என அனைவரும் அழைக்கப்பட்டு கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன்பின் இறுதியில் வரைவாளர்களின் சொந்த

பணத்திலேயே ஓர் கட்டடம் கட்டலாம் என முடிவு செய்தோம். அந்த தருணத்தில் அலுவலகத்தில் மூத்தோர் மற்றும் இளையோர் என்ற நிலை இருந்தது. ஆனால் அலுவலகத்திற்கு பிறகு எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்வோடு கூடி மேற்படி கட்டடம் அமைக்க பாடுபட்டோம்.

கட்டிடம் கட்டுவதற்கான வரைபடங்கள் தயாரித்து கீழ்கண்ட அலுவலர்கள் முக்கிய ஆலோசனை உறுப்பினர்களாக இருந்து செயல்படுத்தினோம்.

1. திரு.எம்.பால்ராஜ், தலைமை வரைதொழில் அலுவலர்
2. திரு.கே.கே.எம்.தாமோதரன், தலைமை வரைதொழில் அலுவலர்
3. திரு.எஸ்.ரத்தினம், தலைமை வரைதொழில் அலுவலர்
4. திரு.எஸ்.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலவலர்.
5. திரு.கே.முத்துக்கிருஷ்ணன், BE., உதவி வரைவாளர்

ஏனைய அனைவரும் உறுதுணையாக நின்று உதவினார்கள்.

01.12.1991 அன்று அனைவராலும் வரைவாளர் சமுதயத்தின் பிதாமகர் என்று போற்றப்பட்டவரும் மாநிலத் தலைவருமான திரு.என்.சேதுராமசாமி அவர்கள் தலைமையில் மரியாதைக்குரிய பொறியாளர் திரு.ஆர்.என்.கிருஷ்ணன், தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித் துறை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றே கட்டிட பணிகளை ஆரம்பித்தோம். கே.முத்துக்கிருஷ்ணன் ஆகிய நான் மற்றும் திரு.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலுவலர் ஆகிய இருவரும் முழுமையாக கட்டிட பணிகள் மேற்கொண்டோம். அவ்வப்போது கட்டிட வேலை செய்தவர்களுக்கு சம்பளம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் வாங்குவதற்கும் பணம் பற்றாக் குறையாக இருந்து வந்தது.

இது போன்ற காலங்களில் எங்களது பணத்தில் வேலையாட்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. பணிகள் தொய்வில்லாமல் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய காலத்தில் உறுப்பினர்களின் சம்பளத் தொகை மிகவும் குறைவானது. குடும்பம் நடத்துவதற்கே பற்றாக்குறை இருந்தது. ஆனாலும் பொள்ளாச்சி கிளைச் சங்க நண்பர்கள் முழு மனதுடன் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை விட அதிகமாக கொடுத்தார்கள். அதன் பயனாக குறுகிய காலத்தில் ஓர் மிகப்பெரிய கட்டிடமாக வடிவமைக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. அதன் பின் கட்டிட திறப்பு விழா மற்றும் மத்திய செயற்குழு கூட்டம் புதிதாக பொள்ளாச்சியில் உருவான "வரைவாளர் மாளிகையில்" வைத்துக் கொள்ளலாம் என பொள்ளாச்சி கிளையின் சார்பில் முடிவு செய்யப்பட்டு மத்திய சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதன் படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிளைச் சங்கங்களுக்கும் விழாவில் கலந்துகொள்ள பத்திரிக்கை அனுப்பப்பட்டது. அனைத்து கிளைச் சங்கங்களை சேர்ந்தவர்களும் வருகை தந்தனர். அவர்களுக்கு தேவையான தங்குமிடம் ஆய்வு மாளிகை போன்றவற்றில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி கட்டடத்தை 15.11.1992 அன்று வரைவாளர்கள் சமுதாயத்தின் ஜாம்பவான் என கருதப்பட்ட திரு.என்.சேதுராமசாமி தமிழ்நாடு வரைவாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் அவர்களது தலைமையில் பொறியாளர்.திரு.இரா.என்.கிருஷ்ணன், தலைமைப் பொறியாளர், (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த விழாவில் மரியாதைக்குரிய திரு.மா.பால்ராஜ், திரு.எஸ்.ரத்தினம், திரு.கே.கே.எம்.தாமோதரன் போன்ற மூத்தோர்கள் மேற்படி விழாவினை முன் நின்று நடத்தி சிறப்பித்தனர். முதல் நாள் இரவு, மறுநாள் காலை

மற்றும் மதியம் என மூன்று வேளையும் சிறந்த உணவுகள் பரிமாறப்பட்டது. இதைத் தொடர்ந்து கூட்டம் இனிதே நிறைவேறியது. வரைவாளர்கள் அனைவரும் உறுதுணையாக இருந்து அனைத்து பணிகளுக்கும் ஒத்துழைப்பு செய்தமைக்காக அனைவருக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. அதன் பின் ஒவ்வொரு மாதமும் மேற்படி கட்டிடத்தில் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தது.

ஏற்கனவே நமது வரைவாளர் மாளிகையில் கீழ் தளத்தில் ஒரு தனி அறையும், கூட்ட அரங்கு 40 அடி x 21 அடி என்ற அளவில் அமைக்கப்பட்டு மேல் தளத்திற்கு உள்ளிருந்து மேலே செல்லும் வகையில் படிகள் அமைக்கப்பட்டது. கூடுதலாக ஒரு அறை அமைக்க வேண்டும் என அனைவராலும் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில் முதல் தளத்தில் ஒரு அறை 21x10 என்ற அளவில் கழிப்றையுடன் கூடிய அறை அமைக்க திட்டமிடப்பட்டது. பொள்ளாச்சி பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில வட்ட அலுவலகத்தில் அன்று பணியாற்றிய திரு.சாய்பாபா, சிறப்புநிலை வரைதொழில் அலுவலர், திரு.சேவியர், வரைதொழில் அலுவலர், திரு.மயில்சாமி மற்றும் திரு.கந்தச்சமி, இளநிலை வரைதொழில் அலுவலர்கள் ஆகியோரின் முக்கிய பங்களிப்புடனும் ஏனைய வரைதொழில் அலுவலர்களின் பங்களிப்புடனும் என்னுடைய மேற்பார்வையிலும் அறை அமைக்கப்பட்டது. நமது பொள்ளாச்சி கிளைச் சங்க வரைவாளர் மாளிகை கட்ட எங்களுடன் துணை நின்ற திரு.அப்துல்சலாம், இளநிலை வரைதொழில் அலுவலர் அவர்களை சிறப்பிக்கும் நோக்கில் மேற்கண்ட அறை அவரது பெயரில் அமைக்கப்பட்டது. இது, அன்றைய மாநிலத் தலைவர் திரு.கே.சண்முகம் அவர்களால் 19.06.1999 அன்று திறந்து வைக்கப்பட்டு இன்று வரை பயன்பாட்டில் உள்ளது. இங்கு கிளைச் சங்க கூட்டம் நடத்தப்பட்டு வந்தது. இனி வரும் காலங்களிலும் இது போன்று அனைவரும் ஒற்றுமையாக இருந்து சங்கத்தை வளர்த்து அனைவரும் நலம் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி,**

**நாள்:** 05.01.2023
**இடம்: பொள்ளாச்சி**

**அன்புடன்,**
**கே.முத்துக்கிருஷ்ணன்**
**உதவிப் பொறியாளர் (பணி நிறைவு)**